[13th March 1958

Caste names in hotel name boards

* 309 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the names of municipalities which have passed resolutions prohibiting the use of caste names in the name boards of hotels; and

(*b*) the number of hotels in each municipality which have been prohibited from using such name boards?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Rasipuram Municipal Council is the only municipal council which has passed resolution prohibiting the use of caste names in the name boards of hotels.

(*b*) One in Rasipuram Municipality.

* 310 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to introduce a new provision in the licences issued to hotels prohibiting the use of caste names in the name boards of hotels?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI P. G. MANICKAM : அப்பேர்ப்பட்ட தீர்மானத்தை முனிசிபாலிட்டி நிறைவேற்றிய பிறகு இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்டுக்கும், கவர்ன்மெண்டுக்கும் அனுப்பிவைத்து, அவர்களுடைய உத்தரவு வந்த பிற்பாடு அந்தத் தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்களா ? அல்லது பதில் கிடைப்பதற்கு முன்னரே கொண்டு வந்துவிட்டார்களா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தமாதிரியான தீர்மானத்தை முனிசிபாலிட்டி நிறைவேற்றியதே அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்திற்கு மேற்பட்டது. ஆகையால் அது சரியல்ல, அதைத் தள்ளிவிடவேண்டும் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : நாம் எல்லோரும் சாதியைப் படிப் படியாக ஒழிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது அதற்கு முதற்படியாக ஹோட்டல்களில் சாதிப் பெயர் போடக் கூடாது என்பதாக சர்க்காரே என் ஒரு சட்டம் கொண்டுவரக் கூடாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இருக்கிற அரசியல் அமைப்புப்படி அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவ்வாறு செய்வதால் பொதுமக்களுக்கு இருக்கிற உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொல்லக்கூடும்.

SRI S. PAKKIRISAMY PILLAI : இந்த சமுதாயம் சாதி பாகுபாட்டின் பேரில், வர்ணுசிரமக் கொள்கையின் ஆதாரத்தின் மேல் அமைக்கப்பட்டிருப்பதால் சாதி வித்தியாச உணர்ச்சி நம்முடைய சமுதாயத்தைவிட்டு நீக்கப் படமுடியாது என்று தெரிவதால் வேறு வழியில், வேறு நடைமுறையில் சாதி வெறியை மக்கள் மத்தியில் இருந்து நீக்குவதற்கு, மக்கள் எல்லோரும் சாதி மத வித்தியாசத்தை மறந்து எல்லோரும் ஓர் இனம் என்ற கொள்கையைக் கடைபிடித்து ஒழுகுவதற்கு வேறு எந்த மார்க் கத்தை அரசாங்கம் மனதில் வைத்துக்கொண்டு திட்டம் போடுகிருர்கள் என்று சொல்லமுடியுமா ?

13th March 1958]

MR. SPEAKER : The question is out of order.

SRI K. VINAYAKAM : Did the Government issue any Government Order to the effect that the municipalities or panchayat boards have no powers to prohibit the issue of licences to such of those people who applied in the name of their castes and that their resolutions like the one passed by the Rasipuram Municipality were beyond their powers and that it was against the spirit of the Constitution?

THE HON. SRI M. A. MANICKAVELU : Not any general instruction in the manner in which the hon. Member has stated. The Rasipuram Municipality has been informed that their passing the resolution is in excess of their powers.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : நகர சபையினர் செய்த தீர்மானம் அவர்களுடைய அதிகார வரம்புக்கு மேற்பட்டது என்ற காரணத்தினால் அது நிராகரிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீண்டாமையை ஒழிப்பதற்குப் பாடுபடும் சர்க்கார் அதற்காக ஏன் தனிச் சட்டத்தையே கொண்டுவரக்கூடாது ? அதன் மூலமாக சாதியை ஒழிக்க முடியாதா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது நல்ல யோசனை தான். ஆனால் இப்போது இருக்கிற சட்டத்தைக் கூடத் திருத்துவதற்கு அரசியல் அமைப்பு இடம் கொடுக்கவில்லையென்று முன்பே சொன்னேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : போர்டுகளில் சாதியை ஒழிக்கிற பிரச்னை அவ்வளவு முக்கியமானது அல்ல. பெயரை மாற்றுவதால் மட்டும் அப்பிரச்சனை தீர்ந்துவிடாது. அரசியல் அமைப்பைத் திருத்தினாலும் முடியாது. ஆகவே சாதி மனப்பான்மையை ஒழிப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி நாம் எல்லோருமே கூடிப்பேசி முடிவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

SRI V. SANKARAN : பெயர் பலகையில் சாதிப்பெயரை அழிக்க வேண்டும் என்று இன்று நடத்தப்படுகிற போராட்டம் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் ஹோட்டல் பெயரைத்தான் அழிக்க நடத்தப்படுகிறது. நாடார் ஹோட்டல், மலையாளி ஹோட்டல் என்று போடப்பட்டிருப்பதை அழிக்க முற்படவில்லை. ஆகவே இவர்களது போராட்டம் ஒரு குறுகிய நோக்கத்தோடு ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரருக் கெதிராகத்தான் செய்யப்படுகிறது என்பதும் பொதுவாக ஜாதி ஒழிப்பிற்காக பாடுபடவில்லை யென்பதும் வாஸ்தவம் இல்லையா ?

MR. SPEAKER : The question is out of order.

SRI K. B. S. MANI : இந்த ஜாதி ஒழிப்பு சம்பந்தமாக இப்போது இருக்கிற சட்டத்தைத் திருத்துவதற்கு அரசியல் அமைப்பு இடம் கொடுக்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள். ஆகவே அரசியல் அமைப்பை மாற்றி அமைப்பதற்கு நமது சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசியல் அமைப்பைத் திருத்துவதால்மட்டும் இதை ஒழிக்க முடியாது என்று முன்பே சொன்னேன். அது சாத்தியமானால் வெகுசுலபமாக மாற்றி அமைத்துவிடலாம். இப்போது முகம்மதியர்களுடைய பெயரை மட்டும் ஹோட்டல் பலகையில் எழுதினால் போதும். அது முகம்மதியர்களின் ஹோட்டல் என்பது தெரிந்துவிடும். ஆகவே மக்களுடைய மனப்பான்மை மாறவேண்டும். அதற்குத்தான் என்ன செய்வது என்பதைப் பற்றி நாம் எல்லோருமே சேர்ந்து ஆலோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI : சாதிகளை ஒழிப்பது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல. அதைப்பற்றி நாம் எல்லோருமே சேர்ந்து ஆலோசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். அதற்கு நாங்கள் எல்லாவகையிலும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம். ஆனால் கூடிய சீக்கிரத்திலேயே நாம் எல்லோரும் கூடி ஆலோசித்தால் அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டும் என்றாலும் அதற்குத்தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இதற்கான நடவடிக்கையை உடனடியாகக் சர்க்கார் மேற்கொள்ளுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதற்காகத்தான் மத்தியில் நான் எழுந்திருந்து பதில் சொன்னேன். எவ்வளவு சீக்கிரம் பண்ண முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பண்ணலாம்.

Sri K. RAMASUBBU : ஹோட்டல் பலகையில் சாதியின் பெயரைக் குறிப்பது சாதி மனப்பான்மையைக் காட்டுவதற்காக அல்ல. குறிப்பாக மலையாளி ஹோட்டல் என்றால் அங்கே அவியல் நன்றாக இருக்கும் எனத் தெரிந்து மக்கள் அங்கே போவதற்கு முடியும் என்கிற காரணத்தினால் அந்த அந்த சாதி தங்களுக்கு சமையலில் இருக்கக்கூடிய சாமர்த்தியத்தை விளம்பரப்படுத்திக் கொள்ளவே அவ்வாறு போடுகிறார்கள் என்பது இல்லையா என்று கேட்கவிரும்புகிறேன்?

Mr. SPEAKER : The question is out of order.

Sri A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டலை நடத்துகிறவர்கள் முதலியார்களாக இருந்தாலும், நாடார்களாக இருந்தாலும் பிராமணர்களை வேலைக்குப் போட்டுக்கொண்டு பிராமணாள் ஹோட்டல் என்று பலகை போடுகிறார்களே, இப்படி உரிமை கொண்டாடுவதற்கு நியாயம் உண்டா ? அந்த ஹோட்டல் உரிமையாளர் பேரிலேயே பலகை போடவேண்டும் என்று வற்புறுத்த முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஹோட்டல் சொந்தக்காரர்களே அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஸ்ரீ கோவிந்தசாமி இவ்வளவு அக்கறை ஏன் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரியவில்லை. இதிலிருந்து இவர்கள் போராட்டத்தின் கொள்கை தெரிந்துவிடுகிறது. ஒருகால் இதற்கு ஸ்ரீ ராமசுப்பு சொன்ன காரணம் உண்மையாக இருக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Wells for elementary schools

* 311 *Q.*—**Sri M. JAGANNATHAN** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount provided in 1955–56 and 1956–57 for schemes for the construction of wells for elementary schools; and

(*b*) the amount actually spent in those years?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No separate provision was made in the budget for payment of grant for sinking wells in elementary schools. Schemes for sinking of wells are included in the provision under buildings for elementary schools.

(*b*) 1955–56—Rs. 350.

1956–57—Rs. 950.

Sri M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற அநேக ஆரம்பப் பள்ளிகூடத்து மாணவ மாணவிகள் குடிதண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அரசாங்கம் அதிகமான தொகையை ஒதுக்கி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முன் வருவார்களா ?